**Revised**

செய்தி வெளியீடு எண் : 821 நாள் : 03.05.2023

**செய்தி வெளியீடு**

**சென்னை மாநகர் மற்றும் புறநகர் உட்பட 28 சட்டமன்ற தொகுதிகளில் ரூ.295.97 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2,042 வளைய சுற்றுத்தர அமைப்புகளை (Ring Main Unit) சென்னை, வி.பி.ராமன் சாலையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.வி செந்தில் பாலாஜி அவர்கள் முன்னிலையில் இன்று திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னை, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.பி.ராமன் சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வளைய சுற்றுத்தர அமைப்பினை (Ring Main Unit) திறந்து வைத்தார். அத்துடன், சென்னை மாநகர் மற்றும் புறநகர் உட்பட 28 சட்டமன்ற தொகுதிகளில் ரூ.295.97 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2,042 வளைய சுற்றுத்தர அமைப்புகள் (Ring Main Unit) நிறுவும் பணிகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.வி செந்தில் பாலாஜி அவர்கள் முன்னிலையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்று (03.05.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/ பகிர்மானம் திரு. மா.சிவலிங்கராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்

தலைவர் திரு. நே. சிற்றரசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள அண்ணாநகர், அம்பத்தூர், ஆவடி, சேப்பாக்கம், எழும்பூர், துறைமுகம், கொளத்தூர், மாதவரம், மதுரவாயல், மைலாப்பூர், பெரம்பூர், ஆர்.கே.நகர், ராயபுரம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், திரு.வி.க.நகர், திருவெற்றியூர், ஆயிரம்விளக்கு, வில்லிவாக்கம், விருகம்பாக்கம், ஆலந்தூர், பூவிருந்தவல்லி, வேளச்சேரி, சோழிங்கநல்லூர், கும்மிடிப்பூண்டி, ஸ்ரீபெரும்பதூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய 28 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் ரூ.787 கோடி மதிப்பீட்டில் விநியோக மின்மாற்றிகள் மற்றும் மின்வழிப் பாதைகளுக்கு புதிய 5,433 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள், ஏற்கனவே 2,704 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) ரூ.391.94 கோடி செலவில் நிறுவப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. மேலும், 2,042 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) ரூ.295.97 கோடி செலவில் நிறுவும் பணிகள் அனைத்தும் முடிவுற்று இன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்த வளைய சுற்றுத்தர கருவி அமைப்பதன் மூலம் மழைக்காலங்களில் ஏற்படும் விபத்தினை முற்றிலும் தவிர்க்க முடிவதோடு, ஒவ்வொரு வளைய சுற்றுத்தர கருவியும் குறைந்தபட்சம் இரு மின்வழிப் பாதைகளுடன் இணைக்கப்பட்டிருப்பதால், ஏதேனும் ஒரு மின்பாதையில் பழுது ஏற்பட்டாலும் மற்றொரு மின்வழிப் பாதையின் மூலம் உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியும். இதனால், பொதுமக்களுக்கு மின்தடையினால் ஏற்படும் அசௌகரியங்கள் வெகுவாக குறையும். மேலும், மின் வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள்

அனைத்தும் SCADA சிஸ்டம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதால் தலைமையிடத்தில் இருந்தே இந்த கருவிகளை இயக்க முடிவதால், மின்சாரம் எடுத்துச் செல்லும் கேபிள்களில் பழுது ஏற்பட்டாலும் கூட அதனை உடனே கண்டறிந்து துரிதமாக சரி செய்ய முடியும்.

சட்டமன்ற தொகுதி வாரியாக இன்று இயக்கி வைக்கப்பட்ட வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (Ring Main Unit) பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சட்டமன்ற தொகுதி வாரியான விவரம்**

| வ எண் | சட்டமன்ற தொகுதியின் பெயர் | இயக்கி வைக்கப்பட்ட வளைய சுற்றுத்தர அமைப்புகள் | தொகை (கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அண்ணாநகர் | 82 | 11.89 |
| 2 | சேப்பாக்கம் | 39 | 5.65 |
| 3 | எழும்பூர் | 46 | 6.67 |
| 4 | துறைமுகம் | 62 | 8.99 |
| 5 | கொளத்தூர் | 140 | 20.29 |
| 6 | மயிலாப்பூர் | 54 | 7.83 |
| 7 | பெரம்பூர் | 144 | 20.87 |
| 8 | ஆர்.கே.நகர் | 52 | 7.54 |
| 9 | ராயபுரம் | 20 | 2.90 |
| 10 | சைதாப்பேட்டை | 57 | 8.26 |
| 11 | தி.நகர் | 69 | 10.00 |
| 12 | திரு.வி.க.நகர் | 45 | 6.52 |
| 13 | ஆயிரம்விளக்கு | 48 | 6.96 |
| 14 | வில்லிவாக்கம் | 71 | 10.29 |
| 15 | விருகம்பாக்கம் | 69 | 10.00 |
| 16 | வேளச்சேரி | 24 | 3.48 |
| 17 | அம்பத்தூர் | 102 | 14.78 |
| 18 | மாதவரம் | 102 | 14.78 |
| 19 | மதுரவாயல் | 190 | 27.54 |
| 20 | சோளிங்கநல்லூர் | 178 | 25.80 |
| 21 | ஆலந்தூர் | 148 | 21.45 |
| 22 | திருவொற்றியூர் | 55 | 7.97 |

| | | | |
|---|---|---|---|
| 23 | பல்லாவரம் | 62 | 8.99 |
| 24 | தாம்பரம் | 99 | 14.35 |
| 25 | திருப்போரூர் | 10 | 1.45 |
| 26 | ஆவடி | 27 | 3.91 |
| 27 | பூந்தமல்லி | 4 | 0.58 |
| 28 | ஸ்ரீபெரும்புதூர் | 43 | 6.23 |
| | மொத்தம் | **2042** | **295.97** |

வளைய சுற்றுத்தர கருவியினை துவக்கி வைத்ததன் தொடர்ச்சியாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உதவி செயற்பொறியாளர்/இராயப்பேட்டை, உதவிப் பொறியாளர்/ திருவல்லிக்கேணி, உதவிப் பொறியாளர்/, ஐஸ் ஹவுஸ் மற்றும் மின்தடை நீக்கும் மையம்/இராயப்பேட்டை ஆகிய அலுவலகங்கள் தற்காலிகமாக செயல்படுவதற்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in